உ

சிவமயம்



பூநகரி ஞானிமடத்தை பிறப்பிடமாகவும் ஜெயபுரம் தெற்கு ஜெயபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர் தருமரத்தினம்–இராசலட்சுமி

அவர்களின் நினைவாக ஒளிரும்

# நினைவு மலர்

03–08–2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



பூநகரி, ஞானிமடத்தை பிறப்பிடமாகவும்
ஜெயபுரம் தெற்கு ஜெயபுரத்தை
வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர் தருமரத்தினம் இராசலட்சுமி

அவர்களின்

# நினைவு மலர்

**03.08.2022**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



மேன்மை மிகு நற்பண்புகளின்

நிலைக்களனாய் விளங்கி

அழகு, அன்பு, கருணை, பணிவு

என்பவற்றின் மொத்த வடிவாகி,

தனக்கென மட்டும் வாழாது

தமது குடும்பத்திற்காக

தம்மை அர்ப்பணித்து

சிந்தையாலும் செயலாலும்

எம் வாழ்வின் ஒளி விளக்காக விளங்கி

எம் இதயத்தில் நீங்கா இடம் பிடித்த

எமது அன்புத் தெய்வத்தின்

பாதக் கமலங்களில் இம்மலரை

கண்ணீர்க் காணிக்கையாக

சமர்ப்பிக்கின்றோம்.



இங்ஙனம்,
குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறப்பு:
1937
03
16

இறப்பு:
2022
07
04



# அமரர்
# தருமரத்தினம் இராசலட்சுமி

அவர்களின்

## திதி வெண்பா

சீர் கொண்ட சித்தர்களும் ஞானிகளும் வாழந்த ஊரில்
பேர் கொண்ட இராசலட்சுமி எனும் மங்கை நல்லாள்
சுபகிருது வருடம் ஆனித்திங்கள் இருபதாம் நாள்
பூர்வபக்க ஸ்கந்த பஞ்சமித் திதியில் பரமனடி சேர்ந்த நாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருமுறைத் தோத்திரப் பாக்கள்

## பஞ்சபுராணம்

### விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணுக்கும் மண்ணுக்கும் நாதனுமாந் தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கனிந்து.

### தேவாரம்

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல் மேனியிற் பால் வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்தமாநிலத்தே.

### திருவாசகம்

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம் பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத்தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாரொடு நோகேன் யார்க்கெடுத்துரைக்கேன்
ஆண்ட நீ அருளிலையானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென்றருள் புரியாயே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

நீறணி பவளக்குன்றமே நின்ற
நெற்றிக் கண்ணுடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் அற்புதக்கூத்தா
அம்பொன் செய் அம்பலத் தரசே
ஏறணி கொடியெம் யீசனே யுன்னைத்
தொண்டனே னிசையுமாறிசையே.

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக் கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகும் கழற உழறி
உமை மணவாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

மண்ணுலகத்தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருளெலா மெளிதின் முற்றுறக்
கண்ணுதலுடையதோர் களிற்கு மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

ஏறுமயிலேறி விளையாடுமுக மொன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடியார்கள் வினை தீர்த்தமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரரை வதைத்த முகமொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியருணாசல மமர்ந்த பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான் மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.

**தென்னாடுடைய சிவனே போற்றி**
**என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி**
**இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க.**

**திருச்சிற்றம்பலம்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மறப்போமா அந்த ஆலம் விழுதை, மண்ணுலகு நீத்து விண்ணரசு எய்திய அமரர் தருமரத்தினம் இராசலட்சுமி

அவர்களின்

## வாழ்க்கைச் சுவடுகள்

ஈழமணித் திருநாட்டில் பனை, தென்னை வளமும், கடல் வளமும் சூழப்பெற்ற வடமராட்சியிலே புத்தூர் எனும் ஊரிலே பிறந்த கந்தன்(சண்முகம்) என்பவரும் வடமராட்சி வதிரியிலே பிறந்த சோதிப்பிள்ளை என்பவரும் திருமணமாகி இல்லறம் சிறந்தோங்க சீரும் சிறப்புடனும் வதிரியிலே வாழ்ந்து வந்தனர். இவர்களது இல்லற வாழ்வின் பயனாக கிருஸ்ணபிள்ளை, சுப்பையா, நடேசு, மயில்வாகனம், மார்க்கண்டு, இராசகுமாரி, இராசலட்சுமி ஆகிய பிள்ளைச் செல்வங்களை பெற்றெடுத்தனர்.

இவர்கள் வதிரியில் வாழ்ந்த காலத்தில் கிருஸ்ணபிள்ளை, சுப்பையா ஆகிய பிள்ளைகளை பெற்றெடுத்தனர். பின் தனது விவசாய நடவடிக்கையை மேற்கொள்வதற்காக சைவம் தழைத்தோங்கும் அழகிய நெல்வயல் சூழ்ந்த சித்தர்களும் ஞானிகளும் வாழ்ந்த ஞானிமடம் எனும் புனித ஊரிலே குடியேறினர். இங்கு சிறிது காலம் உறவினர்களுடன் வசித்து வந்தனர். பின் தமக்கு சொந்தமாக காணிகளை வாங்கி விவசாயத்தை மேற்கொண்டு வந்தனர். இதனால் ஞானிமடத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்டனர். இவர்கள் ஞானிமடத்தில் குடியேறிய பின்னர் நடேசு மயில்வாகனம் மார்க்கண்டு, இராசகுமாரி, இராசலட்சுமி எனும் பிள்ளைச் செல்வங்களைப் பெற்றெடுத்தனர். இவர்களில் கடைசியாக பிறந்தசெல்லப்பிள்ளையே இராசலட்சுமி ஆவார்.

இவர் 1937 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 16ஆம் திகதி கந்தன் சோதிப்பிள்ளை என்பவரிற்கு மகளாகப் பிறந்தார். இவர் தனது கல்வியை கிளி / மட்டுவில் நாடு மகேஸ்வரி வித்தியாலயத்தில் பயின்றார். இவர் கல்வியில் சிறந்து விளங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் தரம் 05 புலமைப் பரீட்சையில் சித்தியடைந்து தரம் 07 இற்கு வகுப்பேற்றம் செய்யப்பட்டார். இவர் தனது கல்வியை தரம் 07 வரையே தொடர முடிந்தது. அக்காலத்தில் பெண்கள் வயதிற்கு வந்தால் கல்வி பயில பாடசாலைக்கு விடமாட்டார்கள். அதுவே இவரது கல்விக்கும் தடையாக காணப்பட்டது.

இவர் அனைவருடனும் சிரித்த முகத்துடன் கலகலப்பாக பழகுவார். திருமண வயதை எட்டிய போது செல்லர் தங்கம்மாவின் மூத்த மகனாகிய தருமரத்தினம் என்பவரை 1954ம் ஆண்டு திருமணம் செய்து கொண்டார். இவரது திருமணம் வெகு சிறப்பாகவும் ஆடம்பரமாகவும் நடைபெற்றது. இவரது இல்லற வாழ்வின் பயனாக கமலவேணி, குணநாயகி எனும் பிள்ளைகளைப் பெற்றெடுத்தார்கள்.

1980 ஆம் ஆண்டு இவரது கணவர் தருமரத்தினம் சுகயீனம் காரணமாக மரணமடைந்தார். இதனால் இவர் மிகுந்த துன்பத்திற்கு உள்ளானார். இவர் தனது கணவரின் இறப்பை தொடர்ந்து தனது இரண்டாவது சகோதரனாகிய சுப்பையா என்பவருடனும் தனது மைத்துனியாகிய அன்னம்மா என்பவருடனும் வாழ்ந்துவந்தார்.

இவர் தனது அண்ணன்களின் பிள்ளைகளையும் வளர்த்து வந்துள்ளார். பின்னர் 1991 ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்தத்தினால் இடம்பெயர்ந்து ஜெயபுரம் பிரதேசத்தில் குடியேறினர்.

1999 ஆம் ஆண்டு தனது இரண்டாவது மகளாகிய குணநாயகி என்பவரை தனது அண்ணனின் கடைசி மகனாகிய மனோகராஞ்சிதன் என்பவரிற்கு திருணம் செய்து வைத்தார். மனோகராஞ்சிதன் குணநாயகி என்பவர்கள் சுகன்யன், மாதுளா, சுவீகன் ஆகிய பிள்ளைகளை பெற்றெடுத்தார். இவர் தனது பேரப்பிள்ளைகளை பாசம்காட்டி உணவூட்டி வளர்த்து வந்தார்.

இவர் தனது மருமக்களின் பிள்ளைகளையும் பாசம் காட்டி வளர்த்து வந்தார். இவர் தனது அண்ணன் மற்றும் மைத்துனியின் இறப்பின் பின் தனது கடைசி மகளாகிய குணநாயகியுடன் வாழ்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தார். 2008 ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்தத்தினால் இடம்பெயர்ந்து செல்லும் வேளை மருமகளாகிய பரமேஸ்வரி என்பவர் மரணமடைந்தார். இதனால் இவர் கடும் துன்பத்திற்குள்ளாகி உடல் நிலை பாதிக்கப்பட்டு காணப்பட்டார். இவரை கடைசி மகளாகிய குணநாயகி என்பவர் மிகுந்த அன்புடனும், கவனத்துடனும் தனது தாயின் பணிவிடைகள் அனைத்தையும் செய்து வந்தார். மருமகன் பேரப்பிள்ளைகள் ஆகியோர் மிகுந்த பாசத்துடன் பழகி வந்தனர்.

2022.06.30 அன்று உடல் நலக்குறைவால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். மீண்டும் சுகமடைந்து வீட்டிற்கு வருவார் என எதிர்பார்த்திருக்கும் வேளையில் காலனவனின் கண்பட்டு 2022.07.04 அன்று கிளிநொச்சி வைத்தியசாலையில் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், மருமக்கள், உறவினர், அயலவர்கள், நண்பர்கள், பழகியோர் கதறியழ தனது இறுதி மூச்சை நிறுத்தி இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக.

சுபம்.

**ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !**

ஆயிரம் சொந்தங்கள் அணைத்திட இருந்தாலும்
உம்மைப்போன்று
அன்பு செய்ய யாருமில்லை எமக்கு...



**வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து அமரத்துவம் எய்திய**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இரண்டாவது மகளின் மூத்த புதல்வனின் 1வது பிறந்த
தினத்தில் தனது மகள் மருமகன் மைத்துனி அன்னம்மாவுடன்



தனது மூத்த மகள் ,கடைசி மகள், மருமகன்,
பேத்தி, பூட்டியுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






தனது கடைசி மகளுடன்



பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகளுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூத்த மகள் புலம்பல்

என்னைப் பெற்றெடுத்த தாயே
என்னைப் பாலூட்டி சீராட்டி வளர்த்த அன்னையே
உன் பிரிவு தாங்க முடியவில்லை
நித்தம் கண்ணீர் சிந்திக் கொண்டிருக்கிறேன்
என்னை தனிமரமாய் தவிக்க விட்டுச் சென்றதேனோ....

பெற்ற நாள் முதலாய் என்னை விட்டுப் பிரிந்ததில்லை
நானும் உன்னை விட்டு பிரிந்ததில்லை தாயே
இப்போது மட்டும் என்னை விட்டு விட்டு பிரிந்து சென்றதேனோ..
தனிமரமாய் தவிக்கின்றேன்
நித்தம் நித்தம் உன் நினைவால் துடிக்கின்றேன்
ஆண்டுகள் பல சென்றாலும் ஆறாது
உன் நினைவுகள் ஒரு போதும்



**கமலவேணி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குணநாயகி இளைய மகளின் புலம்பல்

பத்துமாதம் என்னை சுமந்து பெற்றெடுத்த தாயே
இரவு பகலாய் கண்விழித்து என்னைக் காத்தாயே
உன் உதிரத்தை பாலாக்கி எனக்களித்தாயே
இப்போது எங்கு நீ சென்றாயோ...

கிளி என்று செல்லமாய் அழைப்பாயே
இனி எப்போது மீண்டும் கிளி என்று அழைப்பாயோ
எங்கு சென்றாலும் என்னுடனே செல்வாயே
இப்போது மட்டும் என்னை விட்டு எங்கு சென்றாயோ
அம்மா என்று அழைக்கிறேன்
அழுது புலம்பி தவிக்கிறேன்
என்னை தனியாய் தவிக்க விட்டுச் சென்றதேனோ
கண்ணிமைக்கும் நொடியில்
காலன்கவர்ந்து சென்றதேனோ
ஓவென்று ஒப்பாரி வைத்து அழுகிறேன்
ஓடோடி வாராயோ என் கண்முன்னே



## மருமகன் புலம்பல்

மனம்நிறைந்த மாமியாய் கண்டேன் நான்
மதிப்போடு எனை அழைத்துப் பேசும் போதில்
கனம் பண்ணி உங்களிடம் அன்பு செய்து
கடைசி வரை உடனிருந்த உறவு நான்
இனம் எல்லாம் ஒன்றுகூடி இரங்கல் செய்ய
இறுதியாக உங்கள் முகம் கண்டேன் மாமி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரப்பிள்ளைகள் புலம்பல்

தத்தி நாம் நடந்து நடந்து வந்தபோதில்
தயவாக கரம் நீட்டி அழைத்துக் கொஞ்சி
உத்தமமாய் உறவாடும் அன்புப் பாட்டி
உண்பதற்கு சிற்றுண்டி கையில் தந்து
புத்திவரும் பழங்கதைகள் சொன்ன பாட்டி
புத்தாடை அணிந்து கொண்டு எங்கே போறீர்??



## பெறாமக்கள் புலம்பல்

சொந்தத்தில் உயிராய் இருந்தீர்
சொல்லியே அறிவுகளும் எமக்குத்தந்து
சந்ததியை வளர்த்து நின்ற மூத்தோர் நீங்கள்
சடுதியாய் நோய் உங்கள் உடலைத் தாக்க
வெந்துநாம் வேதனையில் இருந்த வேளை
வெம்பியழ வைத்தீர்கள்

## உற்றார் உறவினர் புலம்பல்

குற்றமிலாக் குணங்களோடு குடும்பம் சார்ந்து
கூடிநின்று கருமமாற்றும் அன்பு உறவே
உற்றவளாய் உறவினராய் பழகி நின்று
உதவிகளும் தருணத்தில் செய்து கொள்ளும்
அற்புதமான உறவொன்றை இழந்து நின்று
அவர் பாதம் பணிவோடு போற்றிநிற்போம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகன் துணை



# கந்த சஷ்டி கவசம்

## காப்பு

## நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம் போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்தோங்கும்
**நிஷ்டையுங் கைகூடும் நிமல ரருள்கந்தர்**
**சஷ்டி கவசந் தனை.**

**குறள் வெண்பா**

**அமரரிடர் தீர வமரம் புரிந்த**
**குமரனடி நெஞ்சே குறி.**

நூல்

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாட கிண்கிணி யாட
மைய நடனஞ்செய்யும் மயில் வாகனனார்
கையில்வே ல்எனைக் காக்கவென்று வந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்றி
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரஹண வீரா நமோ நம
நிபவ சரஹண நிறநிற நீறென
வசர வணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளு மிளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயுங் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் மொளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலங்குகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ சணமும் பதக்கமுந் தரித்து
நண்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீராவும்
இருதொடையழகும் இணைமுழந்தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்றிரு வடியை உறுதியென் றெண்ணும்
என்றலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டு கண்ணினைக் காக்க
விதிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல்முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னமிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி யிரண்டும் அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பனைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியிணை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காகக்
எப்பொழு தும்மெனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருடன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீங்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத்தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட்சதரும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியனைக்கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலு மிருட்டிலும் எதிர்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடனை வரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமு மயிரும் நீண்முடி மண்டையும்
பாவை களுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய பாவையும் ஒட்டியச் செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட டலறி மதிகெட் டோட
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கால்கை முறிய
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு முழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதிற் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டதுவோட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியுங் கரடியும் இனித்தொடர்ந்தோடத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுடன் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசுஷயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் புரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்றிரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமார
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க யானுனைப்பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புடன் இரட்சி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலாயுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக் குறமகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கவென் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவன்நீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திடவருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துட னாளும்
ஆசாரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்துநீ றணிய
அட்ட் திக் குளளோர் அடங்க் லும் வசமாயத்
திசைமன்ன ரெண்மர் செயல தருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறித்தென துள்ளம் அஷ்டலட்சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துணை வாக
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றனதுள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயினட மிடுவோய் மலரடி சரணம்
சரணஞ் சரணஞ் சரவண பவஓம்
சரணஞ் சரணம் சண்முகா சரணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தேவி துணை

ஓம் சக்தி

## கௌரி காப்பு

### விநாயகர் துதி

**முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு**
**என்னின் றருள்செய் எலிவா கனப்பிள்ளாய்**
**சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோர்வுதரும்**
**எக்குற்றமும் வாராமற்கா.**

### பாட்டு

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்பாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்துவந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மா காளித்தாயே
கொடிய மகி ஷாசுரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம்யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீயிருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மா நீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரிநீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்று நீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டு விழித்தான் சிவனவனும்
அம்மா உமையணைத்தே அருள்மாரி பொழிந்தானே
வகையாற்றுப் படலமிதை வழிவழியாய்க் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கே அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்கு பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே!
நான் விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்குக் கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்குத் திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீர சக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசத்தி தாயவளே
ஏட்டுடைத் தேவியரே எல்லாம்மிகு வல்லமையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால்பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னை காருமம்மா
காளிமகா தேவியளே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைக்காக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையைக் கணப்பொழுதே மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்துபுகழ் தேவியளே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம்பெருகிவிடும் நல்வாழ்வு மிகுந்துவரு
தொடர்ந்து அணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெபமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தணச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டுக் கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலைபோற் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிரு
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல் லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வு முண்டு
எச்சகத்தி லோர்களெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவார்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாய் கௌரியவள்
கௌரிக காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கி வர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்.

**- ஓம் சக்தி ஓம்.....**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயப்பன் தோத்திரப் பாமாலை



மண்ணுலகெல்லாம் காத்தருள்
செய்ய மணிகண்ட தேவா வருக வருக
மாயோன் மைந்தா வருக வருக
ஐங்கரன் சோதரா ஐயப்பா வருக

புலிவாகனனே வருக வருக
புவியெல்லாம் காத்திட வருக வருக
பூரணை நாதனே வருக வருக
புண்ணிய மூர்த்தியே வருக வருக

பூதநாயகா வருக வருக
புஷ்கலை பதியே வருக வருக
பொன்னம்பலதுறை ஈசா வருக
அடியாரை காக்க அன்புடன் வருக

வருக வருக வாசவன் மைந்தா
வருக வருக வீரமணிகண்டா
வஞ்சனை நீக்கிட வருக வருக
வல்வினை போக்கிட வருக வருக

ஐயம் தவிர்த்திட ஐயப்பா வருக
அச்சம் அகற்றிட அன்பனே வருக
இரு வினை களைந்தே எனையாட்கொள்ள
இருமூர்த்தி மைந்தா வருக வருக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதினென்படியை மனதில் நினைக்க
பண்ணிய பாவம் பொடி பொடியாகும்
ஐயப்ப சரணம் என்றே சொல்லிட
ஐம்பூதங்களும் அடிபணிந்திடுமே

சபரிகிரிசனை நினைத்தே நீரிட
துன்பங்கள் யாவும் தூள் தூள் ஆகும்
சரணம் சரணம் என்றே சொல்லிட
சித்திகள் யாவும் வந்தடைந்திடுமே

பம்மைபயின் பாலன் பெயர் சொல்லிடவும்
பகைவர்கள் எல்லாம் பணிந்தே வணங்குவர்
ஐயப்பன் பாதம் அனுதினம் நினைக்க
அவனியில் உள்ளோர் அடிபணிந்தேத்துவார்

சரணம் சரணம் ஐயப்பா சரணம்
சரணம் சரணம் சபரிகிரிசா
சரணம் சரணம் சற்குருநாதா
சரணம் சரணம் சுவாமியே சரணம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழில் கால் நிறைவும்
## அது அழைக்கப்படும் விதமும்

- 01 வருடம் - காகித விழா
- 02 வருடம் - பருத்தி விழா
- 03 வருடம் - தோல் விழா
- 04 வருடம் - பூ விழா
- 05 வருடம் - மர விழா
- 06 வருடம் - கற்கண்டு விழா
- 07 வருடம் - செம்பு விழா
- 08 வருடம் - வெண்கல விழா
- 09 வருடம் - மணிக்கலச விழா
- 10 வருடம் - தகர விழா
- 11 வருடம் - எஃகு விழா
- 12 வருடம் - லினன் விழா
- 13 வருடம் - லேஸ் விழா
- 14 வருடம் - தந்த விழா
- 15 வருடம் - படிக விழா
- 20 வருடம் - பீங்கான் விழா
- 25 வருடம் - வெள்ளி விழா
- 30 வருடம் - முத்து விழா
- 40 வருடம் - மாணிக்க விழா
- 50 வருடம் - பொன் விழா
- 60 வருடம் - மணி விழா / வைர விழா
- 75 வருடம் - பவள விழா
- 80 வருடம் - அமுத விழா
- 100 வருடம் - நூற்றாண்டு விழா
- 1000 வருடம் - மில்லேனியம் விழா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுக் குறிப்புக்கள்

❖ எலும்புகள் உறுதியாக இருக்க:-

ஒரு நாள் விட்டு ஒரு நாள் அதிகாலை வேளையில் வயிற்றில் மாதுளம் பழத்தைச் சாப்பிட்டு வந்தால் எலும்புகள் நன் உறுதிப்படும்.

❖ கால் வெடிப்பு குணமாக:-

மருதோன்றி இலைகளைப் பறித்து வந்து சுத்தம் செய்து எலுமிச்சம் பழத்தின் சாற்றை விட்டு நயமாக அரைத்து காலில் வெடிப்புள்ள இடங்களில் தடவி வந்தால் வெடிப்பு குணமாகும்.

❖ தொண்டை கரகரப்பு குணமாக:-

மருதோன்றி இலையைப் பறித்து கழுவிச் சுத்தம் செய்து நீரில் போட்டு ஊற வைத்திருந்து, பின்னர் அந்த நீரால் வாயைக் கொப்பளித்தால் தொண்டைக்கரகரப்பு குணமாகும்.

❖ கொழுப்புச் சத்தைக் குறைக்க:-

கொழுப்புச் சத்து அதிகமாக உள்ளவர்கள், கொழுப்புச் சத்துள்ள பொருட்களை அதிகமாக உண்பதைத் தவர்ப்பது மட்டுமன்றி, காலை வேளையில் பூண்டு, வெங்காயம் இரண்டையும் வதக்கி சாப்பிட்டு வந்தால் சில நாட்களில் கொழுப்புச்சத்துக் குறையும்.

❖ பூச்சிகள் வெளியேற:-

பப்பாளிக் காய்களை குறுக்கு வாக்கில் வெட்டி, அதில் வரும் பாலை எடுத்து, அத்துடன் சிறிது விளக்கெண்ணெயை சேர்த்து கலக்கி உள்ளுக்குள் கொடுத்தால் பேதியாகும் போது வயிற்றுள் உள்ள பூச்சிகள் வெளியேறிவிடும்.

❖ உதடுகள் சிவப்பாக:-

செடியிலிருந்து புதிதாய் பறித்த கொத்தமல்லி இலைகளை கழுவி சுத்தம் செய்து விழுதாக அரைத்துதெடுத்து, இரவில் படுக்கப போவதற்கு முன்னர் உதட்டில் தடவி வந்தால் உதடுகள் சிவப்பாக மாறும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ பசி, மந்தம், மயக்கம் நீங்க :

கீழ்காய்நெல்லித்தூளுடன் சிறிது தேன் கலந்து சாப்பிட்டு வந்தால் விரைவில் மேற்கண்ட குறைபாடுகள் நீங்கும்.

❖ இரத்தப் போக்கு கட்டுப்பட :-

செம்பரத்தை பூவைப் பறித்து நெய்விட்டு வதக்கிச் சாப்பிட்டு வந்தால் எல்லா விதமான இரத்தப்போக்கும் கட்டுப்படும்.

❖ இரத்த விருத்திக்கு :-

பீற்றூட் கிழங்கை உணவில் அடிக்கடி சேர்த்துச் சாப்பிட்டு வந்தால் நாளடைவில் இரத்தம் விருத்தியாகும்.

❖ உடல் அரிப்பு நீங்க :-

துவரம் பருப்பை வேகவைத்து அத்துடன் அத்திக்காயை சேர்த்து சமைத்து சாப்பிட்டு வந்தால் உடல் அரிப்பு நீங்கும்.

❖ சருமம் பளபளப்பாக :-

இளம் கொத்த மல்லி இலையைப் பறித்துக் கழுவிச் சுத்தம் செய்து சாறெடுத்து உடலில் சிறிது நேரம் கழித்துக் குளித்து வந்தால் சருமம் பளபளப்பாக மாறும்.

❖ உதடு வெடிப்பு குணமாக :-

சித்திரப் பாவட்டை என்ற கீரையை சுத்தம் செய்து பருப்புடன் சேர்த்து சமைத்து சாப்பிட்டுவந்தால் உதட்டில் உள்ள வெடிப்பு குணமாகும்.

❖ சொட்டையான இடத்தில் முடிவளர :-

நேர்வாளங் விதையை உடைத்து அதன் பருப்பை எடுத்து அதனுடன் சிறுது நீரை விட்டு அரைத்து எடுத்து தலையில் சொட்டை உள்ள இடத்தில் நன்கு தேய்த்து வந்தால் முடி வளரும்.

❖ படர்தாமரை நீங்க :-

பூவரசு மரத்தின் காயை நீர்விட்டு மைபோ அரைத்தெடுத்து படர்தாமரையின் மீது தடவினால் குணமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோய் வராமல் உடல் நலமாக வாழ...

- ❖ அதிகாலையிலே சூரியோதயத்திறகு முன் எழுந்திருக்க வேண்டும்.
- ❖ சிறிது தூரம் நடந்து மலசல நிவர்த்தி செய்ய வேண்டும்.
- ❖ மலச்சிக்கல் உள்ளவராயின் எழுந்தவுடன் பல்துலக்கி, தண்ணீர்/ வெந்நீர் 12 அவுன்ஸ் அளவு பருகிவிட்டு சிறிது உலாவினால் மலநிவர்த்தி ஆகும்.
- ❖ பல் நன்றாகத் துலக்க வேண்டும். ஆலும் வேலும் பல்லுக்குறுதி; ஆகவே ஆலம் அல்லது வேலங்குச்சியினால் பல் துலக்குதல் நல்லது.
- ❖ குளிர்ந்த நீர் அல்லது வென்னீரில் தினந்தோறும் நீராடவேண்டும்.
- ❖ சுத்தமான உலர்ந்த துணியினால் துவட்டிக் கொள்ள வேண்டும்.
- ❖ சிற்றுண்டி அருந்தி தொழிலில் ஈடுபட வேணடும்.
- ❖ நல்ல காற்றைச் சுவாசிகக் வேணடும். ஒருபோதும் வாயினால் சுவாசம் விடக்கூடாது. மூக்கினால் சுவாசிக்க வேண்டும்.
- ❖ உணவருந்தும்போது பேசவே கூடாது. மௌனமாக நன்றாக மென்று சுவைத்துச் சாப்பிட வேண்டும்.
- ❖ மனக் கவலைப்படக்கூடிய பேச்சுக் கூடாது. நிதானமாக உணவை அருந்த வேணடு ம்.
- ❖ தினசரி உணவு வகையிலே காய் கறிகள், பழங்கள், நெய், மோர் சேர வேணடும்
- ❖ பகல் உணவை விட இரவு உணவு குறைவாகவும் எளிய வகையாகவும் இருக்க வேண்டும்.
- ❖ இரவில் தேவைக்கு குறைவாகவே உண்ண வேண்டும். காலங்கடந்து அகாலத்தில் சாப்பிடக்கூடாது. அஜீரணமும், கெட்டகனவுகளும் ஏற்படும்.
- ❖ இரவில் சாப்பிட்டதும் சற்று உலாவிவிட்டு தூங்கப் போக வேணடும் உணவருந்திய பிறகு வேலைகளைச் செய்யக்கூடாது.
- ❖ கோபமே கூடாது, கோபப்பட்டால் நரம்புத் தளர்ச்சி, இரத்த அழுத்த நோய் உண்டாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக முதன்மைகள்

- மிகப்பெரிய விலங்கு - ஆபிரிக்க யானை
- அதிவேக விலங்கு — சிறுததைப்புலி
- மிகப்பெரிய வைரம் - குல்லினம்
- அதிவேகப் பறவை - ஹம்மிங் பறவை
- பாரிய கடற் பறவை - ஆல்படர் ரஸ்
- உயரந்த மரம் - கலிபோர்னியா காத்தாடி மரம்
- முதல் செயற்கை கோள் - ஸ்புட்னிக்
- முதல் விண்வெளி வீரர் - யூரிக்காரின் ரஷ்யா
- மிக உயர்ந்த கட்டிடம் - சியாஸ் டவர் சிகாகே
- மிகப் பெரிய நூலகம் - தேசிய கீயூ நூலகம்
- மிக உயரத்தில் உள்ள நகரம் - வென்சுவான் சைனா
- மிகப் பெரிய அணை - நூராக் அணை ரஷ்யா
- மிக உயரமான ஏரி - டிடிகாகா 3812மீ
- உயரமான பீடபூமி - பாமீர் பீடபூமி
- உயரமான எரிமலை - கொடபாக்ஸி
- மிகப்பெரிய திரையரங்கம் - ராகஸ் நியூயார்க்
- மிகப்பெரிய துறைமுகம் - நியூயார்க்
- மிகப் பெரியபூங்கா - உட்பட்ப்பல்லோ தேசிய பூங்கா கனடா
- மிகப் பெரிய தீவு - ஆஸ்திரேலியா
- மிகப்பெரிய தீப கற்பம் - அரேலியா 32,50,000 ச.கி.மீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச முக்கிய தினங்கள்

- ஜனவரி 10 - உலக சிரிப்பு தினம்
- ஜனவரி 31 - உலகதொழு நோயாளர் தினம்
- பெப்ரவரி 14 - உலக காதலர் தினம்
- மார்ச் 08 - சர்வ தேச மகளிர் தினம்
- மார்ச் 15 - உலக ஊனமுற்றோர் தினம்
- ஏப்ரல் 01 - உலக முட்டாள் தினம்
- ஏப்ரல் 15 - உலக நூலக தினம்
- ஏப்ரல் 17 - உலக இரத்த தினம்
- மே 01 - உலக தொழிலாளர் தினம்
- மே 03 - உலக பத்திரிகைச் சுதந்திரம்
- யூன் 01 - உலக குழந்தைகள் தினம்
- யூன் 05 - உலக சுற்றுச்சூழல் தினம்
- யூலை 28 - உலக அகதிகள் தினம்
- ஆகஸ்ட் 06 - கிறோசிமா அணுகுண்டு தினம்
- ஆகஸ்ட் 09 - நாகசாகி அணுகுண்டு தினம்
- செப்ரெம்பர் 03 - சர்வதேச சமாதான தினம்
- செப்ரெம்பர் 08 - உலக எழுத்தறிவு தினம்
- செப்ரெம்பர் 27 - உலக சுற்றுலா தினம்
- ஒக்டோபர் 01 - உலக சிறுவர், முதியோர் தினம்
- ஒக்டோபர் 06 - உலக ஆசிரியர் தினம்
- ஒக்டோபர் 15 - வெள்ளைப்பிரம்புத் தினம்
- ஒக்டோபர் 16 - உலக உணவு தினம்
- ஒக்டோபர் 17 - வறுமை ஒழிப்பு தினம்
- ஒக்டோபர் 24 - ஐக்கிய நாடுகள் தினம்
- ஒக்டோபர் 31 - உலக சிக்கன தினம்
- நவம்பர் 17 - உலக மாணவர் தினம்
- நவம்பர் 26 - உலக சட்ட தினம்
- டிசம்பர் 01 - உலக எயிட்ஸ் தினம்
- டிசம்பர் 10 - உலக மனித உரிமைகள் தினம்
- டிசம்பர் 23 - உலக விவசாயிகள் தினம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுவான விடயங்கள்

1. இணையத்தின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்?

   வினிட் சொப்

2. துப்பறியும் நாவல்களின் தந்தையென அழைக்கப்படும் அமெரிக்க எழுத்தாளர் யார்?

   எட்கார் அலன்டோ

3. ஐக்கிய நாடுகள் சபையின் தலையகம் அமைந்துள்ள இடம் எது?

   நியூயோர்க்

4. கணனியின் தோற்றத்திற்கு வித்திட்டவர் யாவர்?

   சீனர்கள்

5. இசைத்தட்டைக் கண்டுபிடித்த அமெரிக்கரின் பெயர் என்ன?

   டொக்ரர் பீற்றர் கோல்ட்.

6. வோட்டர் கேட் ஊழலால் பதவி இழந்த அமெரிக்க ஜனாதிபதி யார்?

   றிச்சட் நிக்சன்

7. இரண்டு உலகப் போர்களிலும் சம்பந்தப்படாத நாடு எது?

   சுவிட்சர்லாந்து

8. உலகிலேயே முதன் முதலில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கிய நாடு எது?

   நியூசிலாந்து

9. பனிச்சறுக்கு விளையாட்டு முதன் முதலில் எந்நாட்டில் ஆரம்பிக்கப்பட்டது?

   நோர்வே

10. நோபல் பரிசு பெற்ற முதல் திரைப்பட இயக்குனர் யார்?

    அகிரா குரோசோவா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனைத் துளிகள்

- அம்மா என்பவள் ஆண்டவனிலும் ஒரு படி மேலானவள்.
- நல்ல நண்பர்களை தேடும் முன் நல்ல நூல்களை தேடிக்கொள்வது நல்லது.
- கலைகளில் ஈடுபாடுடையவன் கவலைகளை மறக்கின்றான்.
- நாம் பிறரிடம் காட்டும் அன்பு பூரணமாவது அவர்களைப் புரிந்து, அனுசரித்து நடக்கும் விதத்திலேயாகும்.
- பிறரை நம்புவதிலும் பார்க்க நம்மை நாமே நம்பினால் வெற்றி நமதே.
- ஒற்றுமையுடனும், அன்புடனும் வாழும் காலம் ஒரு பொற்காலம்.
- பிறரை மதித்திடு, அறிவுரையைக் கேட்டிடு, முடிவை மட்டும் நீயெடு.
- வறுமையை எண்ணினால் வாழ்க்கை இருண்டுவிடும். இருப்பதை மெச்சு வாழ்க்கை இனிக்கும்.
- பொருளீட்டல் என்பது உழைத்துப் பணம் தேடுவது மட்டுமல்ல கையில் உள்ளதை இயன்றவரை ஊதாரித்தனம் பண்ணாமல் இருப்பதும் பொருளீட்டலே.
- தூங்குகின்றவனை எழுப்புவதற்காக பொழுது இருமுறை விடிவதில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி நவில்கின்றோம்

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"


எம் வாழ்வில் பொறுமைக்கு இலக்கணமாய் திகழ்ந்து
இன்முகத்துடன் தேன்மொழி பேசி எம் குடும்பத்தை
பிரகாசிக்கச் செய்த எங்கள் அன்புத் தெய்வம்
அமரர். தருமரத்தினம் இராசலட்சுமி
அவர்களின் மறைவுச் செய்தி அறிந்தவுடன் ஓடோடி வந்தும்
தொலைபேசி மூலமும், குறுந்தகவல்கள் மூலமும் எமக்கு
ஆறுதலும் அனுதாபமும் தெரிவித்த உற்றார், உறவினர்,
நண்பர்களிற்கும் கண்ணீர் அஞ்சலிகள், பதாதைகள்(பெனர்கள்)
போன்றவற்றை வெளியிட்டோருக்கும் செயலற்று நாம்
நின்ற வேளை பிள்ளைகள் போல் உடன் பிறப்புக்கள் போல்
உதிர உறவுகள் போல் உடனிருந்து பல உதவிகள் புரிந்து, தேநீர்,
உணவளித்து எம்மைத் தேற்றியவர்களுக்கும்
இறுதிக்கிரியைகளுக்கு
அனைத்து உதவிகள் செய்தோருக்கும்,
கலந்துகொண்டவர்களுக்கும் எமது சிரம் தாழ்த்தி,
கைகூப்பி மனநிறைந்த
நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குடும்பத்தினர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி



சுந்தரர் (சண்முகம்)
சோ. சிப்பிள்ளை
செல்லையா ✳
தங்கம்மா ✳
மார்க்கண்டு
நடேசு
இராசகுமாரி
இராசலட்சுமி
தருமரத்தினம்
செல்வரட்ணம் ✳
அன்னலட்சுமி ✳
கமலவேணி
குலநாயகி
தங்கமலர்
சரோஜினிதேவி
✳ இராஜேஸ்வரன்
மனோகரரஞ்சிதன்
நிரோஜன்
நிதர்சன்
சகீதனா
சுகன்யன்
மாதுளா
சுவீகன்
போகரஞ்சினி
கமலகண்ணன்
ரமணன்
உமாபாலன் ✳
ரதிமலர்
சதாசிவம்
ரதீஸ்வரி
சிராணி
காவியா + மதுசன்
ஷரோமி
உமாரோஷன்
கன்ஷா
ரபிஷா
நிஷா
நிந்துஜன்
சாதனா
கமில்டன்
திருவரங்கன்
கீர்த்தனன்
விக்னேஸ்வரன்
லோஜினி
கலையரசி
அஜித்தா
யவீனன்
விஸ்ரித்தா
தனுஸ்கா
பிரசாந்த்
அஜந்தன்
அனுஷியா
டனிஸ்
ஆகாஷ்
ஆதி
ஆர்யா
✳ அமரர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளமான வாழ்விற்கு



தூய்மையாக இருப்பதும்
மற்றவர்களிற்கு நன்மை
செய்வதும் தான் எல்லா
வழிபாடுகளினதும் சாரமாகும்.
நன்மை செய்பவன் தனக்கும் பிறர்க்கும்
நன்மையே செய்கிறான்.
தீமை செய்பவன் தனக்கும்
மற்றவர்களுக்கும் தீமை செய்கின்றான்.
உடலும் உள்ளமும் தூய்மையின்றி
கோயிலுக்கு போவதும் இறைவனை
வழிபடுவதும் பயனற்றதாகும்.
நேர்மையுடனும் தைரியமாகவும்
பக்தி சிரத்தையுடனும் வாழ்ந்தால்
இறைவனை அடைவது உறுதி.

"நன்னெறியே இறைவணக்கம்"

**சுவாமி விவேகானந்தர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org